நீங்கள் சூ செயின்ட் மரியில் தற்போது வசிப்பவராக இருந்தாலும், அங்கு திரும்பி வரும் வசிப்பாளராக இருந்தாலும், புதியவராக இருந்தாலும், அல்லது சூ செயின்ட் மரிக்கு இடம் மாறுவது பற்றி சிந்திக்கிறீர்கள் என்றாலும், இந்த நகரத்தில் சுற்றிப் பார்க்கத் தேவையான முக்கியத் தகவல்களை Discoverthesault.ca உங்களுக்கு அளிக்கும்; உண்மையிலேயே சூ செயின்ட் மரியில் குடியேற உங்களுக்குத் தேவைப்படும் அல்லது நீங்கள் பெற விரும்பும் எல்லா சேவைகளுக்கும் உங்களை இணைக்கும்.

அரசு மற்றும் சமூக சேவைகள், வளங்கள், கலைகள் மற்றும் கலாச்சாரம், கல்வி, வேலை, தொழில், வணிக வளங்கள், மற்றும் இந்த நகரம் வழங்கும் எல்லாவற்றையும் தேடவும் இணைக்கவுமான திறனை Discoverthesault.ca அளிக்கிறது.

ஒரு காலத்தில் முதல் தேசங்களின் மக்கள் சந்திக்கும் இடமாக இருந்த சூ செயின்ட் மரி, உண்மையிலேயே ஒரு சர்வதேச நகரம். இந்த இடத்தைக் கண்டுபிடித்த முதல் பிரெஞ்சு சுற்றுப்பயணி எதியென் புரூலே என்று சொல்லப்படுகிறது. அடுத்த நூற்றாண்டில் மயிர்த்தோல் வர்த்தகம் வளர்ச்சியடைந்து முதலில் பிரெஞ்சு வர்த்தகர்களையும் பிறகு பிரிட்டிஷ் வர்த்தகர்களையும் கொண்டுவந்தது.

1894இல் அமெரிக்கத் தொழில்முனைவாளர் ஃப்ரான்சிஸ் ஹெச். கிளர்கு வந்து சேர்ந்தார். நகரத்தில் ஒரு தொழில்மயமாக்கக் காலத்தைக் கொண்டுவந்தார். கிளர்கு உள்ளூர் மின்சக்தி ஆலையை வாங்கி, ஏராளமான தொழில் நிறுவனங்களை உருவாக்கினார். ஒரு காகித ஆலை, மர நிறுவனம், சுரங்க நிறுவனம், எஃகு ஆலை, தெரு ரயில்வே, நகருக்குள்ளான ரயில் இரும்புப் பாதை, ஒரு சரக்குப் போக்குவரத்து நிறுவனம் ஆகியவையும் அவற்றில் அடங்கும்.

போரை அடுத்து வந்த காலத்தில் ஐரோப்பியர்கள் பெருமளவில் புலம்பெயர்ந்தார்கள். அவர்களது திறமைகள் மற்றும் முயற்சிகளின் நேரடி விளைவாக, சூ செயின்ட் மரி கடந்த நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது.

இன்று, அந்த வளர்ச்சி சமீப காலமாக தென் அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளிலிருந்து வருபவர்களால் தொடர்கிறது.

கனடா புள்ளிவிபரப் பகுதி நடத்திய 2006 மக்கள்தொகைக் கணக்கெடுப்பில், வெளிநாட்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கை சூ செயின்ட் மரியில் சுமார் 11% என்று தெரிகிறது. பெரும்பாலான கனடிய சமூகங்களைப் போல, பணித் திறனுள்ள பணியாளர்களும் கனடாவிற்குப் புதிதாக வருபவர்களும் சூ செயின்ட் மரியின் மக்கள்தொகை மற்றும் பொருளாதாரத்தின் நிலைபெறுதிறனுக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் முக்கியமாக இருப்பார்கள் என்று இந்த நகரம் அடையாளம் கண்டது.

இதற்காக, மக்கள்தொகையின் நிலைபெறுதிறன், உள்ளூர்ப் பொருளாதாரத்தின் வளர்ச்சி ஆகியவற்றில் சூ செயின்ட் மரிக்கு அமோகமான பலன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அடுத்தடுத்த நகர கவுன்சில்கள் சர்வதேச நாடல் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன.

அதே போல, உள்ளூர் தொழில்துறை, பின் இரண்டாம்நிலைக் கல்வி மற்றும் பிற அமைப்புகளும் குறிப்பான விளம்பர பிரசாரத் திட்டங்கள் மூலம் கனடாவிற்கு வெளியே சர்வதேச மாணவர்களையும் பணித் திறனுள்ள பணியாளர்களையும் தொடர்ந்து நாடிவந்திருக்கின்றன.

தாய்நாட்டை விட்டு வந்து ஒரு புதிய நாட்டில் குடியேறுவது ஒருவர் எடுத்து வைக்கும் மிகப் பெரிய முயற்சியாகும். ஒரு சமூகக் காப்பீட்டு எண்ணைப் பெறுவது எப்படி, ஓட்டுநர் உரிமம் பெறுவது எப்படி, கல்வி அமைப்பு எப்படி இயங்குகிறது என்பன போன்ற அடிப்படைத் தகவல்கள் புதியவர்கள் வெற்றிகரமாகக் குடி அமரவும் ஒருங்கிணையவும் முக்கியம்.

ஒன்ராறியோ ரியோ குடியுரிமை மற்றும் புலம்பெயர்வு அமைச்சகத்தின் செயல்திட்ட நிதியுதவியில் ஒரு புலம்பெயர்வு வலைவாசல் உருவாக்கப்பட்டது. *Discover the Sault.ca* அரசு மற்றும் சமூக சேவைகளிலிருந்து கலைகள் மற்றும் கலாச்சாரம் வரை எல்லாவற்றைப் பற்றியும் ஒரே இடத்தில் தகவல்களை அளிக்கிறது.

*Discover the Sault* வலையகம் சூ செயின்ட் மரியை வாழவும் பணிபுரியவும் விளையாடுவதற்குமான சிறந்த இடமாக விளம்பரம் செய்யும் அதே சமயத்தில் புதிய குடிவரவாளர்களுக்குத் தேவையான நடைமுறைத் தகவல்களையும் அளிக்கிறது.

*Discoverthesault.ca* தொடங்கப்பட்டது முதல் அதை 90க்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து/பிராந்தியங்களிலிருந்து பார்த்திருக்கிறார்கள். கனடாவுக்கு அடுத்து இலங்கையிலிருந்தும் அதையடுத்து அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் பார்த்திருக்கிறார்கள்.

இந்த வலையகத்தை முழுவதுமாக பிரெஞ்சு, சீன மொழி, ஹிந்தி, கொரியன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் பார்க்கத் தக்கதாக ஆக்குவதே இந்த செயல்திட்டத்தின் இரண்டாம் கட்டம்.

சூ செயின்ட் மரியின் சமூகத்தை, இங்கு குடியேற முடிவுசெய்தவர்களின் மரபுகள், கலாச்சாரம், அறிவு வளமைநிரம்பிய தன்மை ஆகியவை செழிப்பூட்டுகின்றன.